ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2064/9 - 2018 මාර්තු මස 26 වැනි සඳුදා - 2018.03.26
*2064/9 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்**

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபை கட்டளைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ஆகிய நான், இலங்கை மின்சார சபைக்குத் தேவையாக இருக்கின்ற இங்கு அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியினை கையேற்கும் ஆலோசனைக்கு இந்தக் கட்டளையின் மூலம் அங்கீகாரம் வழங்குகின்றேன்.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய,
மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர்.

2018, மாச்சு 21.

**அட்டவணை**

இலங்கையின் மேல்மாகாணத்தில், கொழும்பு நிர்வாக மாவட்டத்தில், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இல. 576, தும்போவில மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தும்போவில மற்றும் வெவல பகுதியில் அமைந்துள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட காணியானது இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் அடிப்படைத் திட்டம் இல. 6242 ஐ உடைய 1984.12.19 ஆம் திகதியிடப்பட்ட திட்டத்தில் இல. 3 மற்றும் 4 இல் காட்டியுள்ளபடி குறிப்பிடப்பட்டுள்ளவாறு 16 ஏக்கர் பரப்பளவில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளில் அமைந்துள்ளது.

வடக்கு: அடிப்படைத் திட்டம் இல. 6242 புளக் இல. 1 மற்றும் 2 இன் இடம்; கிழக்கு: தொலேகஹடகஹவத்த மற்றும் ஜேம்ஸ் வத்த காணி; தெற்கு: ஸ்ரீ தேவானந்த மாவத்தை மற்றும் ஸ்ரீ தேவானந்த மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 292/1 இன் காணி மற்றும் வரி மதிப்பீட்டு இல. 297 இன் காணி; மேற்கு: அடிப்படைத் திட்டம் இல. 6242 புளக் இல. 2 இன் காணி.


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.






இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.